REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2020 டிசம்பர் 8 செவ்வாய்க்கிழமை

THINAKARAN

வரு. 88 இல. 291 | December 08,Tuesday, 2020 | 20பக்கங்கள் | 30/-




## O/L பரீட்சைக்கான திகதி மார்ச் 01 முதல் 11 வரை

### கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக ஒத்திப்போடப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை எதிர்வரும் 2021 மார்ச் முதலாம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அடுத்த வருடம் மார்ச் முதலாம் திகதி முதல் மார்ச் 11 ஆம் திகதி வரை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை நடத்துவது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு

06

## பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான 50 வீதமான மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில்

### சாந்த பண்டார எம்.பியின் கேள்விக்கு பந்துல குணவர்தன பதில்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**





2020ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள 30,000 மாணவர்களில் 14,969 பேருக்கு அதாவது 50 சதவீதமானவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆளுங் கட்சி எம்.பி. சாந்த பண்டார எழுப்பிய பல்கலைக்கழகப் புலமைப்பரிசில்கள் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

06

## தமிழ் தேசிய கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்த முடியாது

### சரத் வீரசேகரவுக்கு இரா.சம்பந்தன் பதில்



தமிழர்களின் ஏகோபித்த கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினையும், அது வரித்துக் கொண்ட இலட்சியத்தில் தடம்புரளாது தொடர்ந்தும் பயணிக்கும்.

அதை எவரும் பிளவுபடுத்தவும் முடியாது தடைசெய்யவும் முடியாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினை தடைசெய்ய வேண்டும் என்ற சரத் வீரசேகரவின் கருத்து தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் கூறிய அவர், கூட்டமைப்பு ஒரு போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியாக செயற்பட்டதில்லை. கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் ஆதரித்தார்கள் என்பதற்காக அதை விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சி என்று எவரும் கூற முடியாது.

## கொரோனா மரண

## செய்வது அரசின்




### பாராளுமன்றத்தில் ஹலீம் M.Pயின் உரைக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பதில்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொரோனா தொற்றில் மரணிப்பவர்களை தகனம் செய்வது அரசாங்கத்தின் தீர்மானம் அல்ல. தொழிநுட்பகுழுவின் தீர்மானத்தை மீறி அரசோ அமைச்சரவையோ செயற்பட முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



**தொழில்நுட்ப குழுவின் தீர்மானத்தில் அரசோ அமைச்சரவையோ தலையிடுவதில்லை**

கொரோனாவில் மரணிப்பவர்களின் இறுதிக் கிரியை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப குழுவுக்கே வழங்கப்பட்டுள்ளது. இதில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கும் அரசாங்கத்துக்கும் அமைச்சரவைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

குறித்த தொழிநுட்ப குழு எடுக்கும் தீர்மானத்தையே அரசாங்கம் பின்பற்றுகின்றது. அதனை மீறி அரசாங்கத்துக்கு தீர்மானிக்க முடியாது என்றார்.

**தகனம் செய்வதில் பிடிவாதமாக இருப்பது ஒரு இனத்தை பழி தீர்க்கவா என சந்தேகம்!**



பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட விவாதத்தில் சுற்றாடல், வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு

06

### மஹர சிறைச்சாலை சம்பவம்

## இடைக்கால அறிக்கை நேற்று நீதியமைச்சரிடம் கையளிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் விசேட குழுவின் இடைக்கால அறிக்கை நேற்று நீதியமைச்சர் அலி சப்ரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 116 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணை நடவடிக்கைகளில் இருபத்தைந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள்

06



ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய வளாகம் மற்றும் நோர்வூட் நகரம் தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. இதற்கான நடவடிக்கையை நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் ரவி குழந்தைவேலு தலைமையிலான குழுவினர் முன்னெடுத்தனர்.

படம்: ஹற்றன் சுழற்சி நிருபர்

## நிவாரணப் பொதிக்கு பதிலாக பத்தாயிரம் ரூபாவை வழங்கவும்

### பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் கோரல்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



அரசாங்கத்தினால் வழங்கப்படும் 10,000 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதியில் பாவனைக்கு உதவாத பொருட்களுள்ளன. பொதியில் பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் இல்லையென மக்கள் குற்றம் சுமத்துவதால் உணவுப்பொதிக்கு பதிலாக 10,000 ரூபாவை வழங்க வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து

06

## PCR மேற்கொள்ள மேலும் 10 மருத்துவமனைகளுக்கு அனுமதி

### டாக்டர் சமன் ரத்னாயக்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பி.சி.ஆர் பரிசோதனைகளை அதிகரிக்கும் வகையில் மேலும் 10 ஆஸ்பத்திரிகளுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளாந்தம் 20,000 பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளும்வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. நாட்டில் தற்போது 13 ஆயிரத்துக்கும் 14 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் நாளாந்தம்

06



## உரிமை கோரப்படாத நிலையில்

## மன்னார் காற்றாலை மின் நிலையம் இன்று திறப்பு



## TMVP கட்சி பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிப்பு

### டிசம்பர் 21 வரை; நீதவான் உத்தரவு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொது செயலாளர் பூ.பிர